பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 06 2025 **WEDNESDAY** 7 15 **AM**

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமது மூன்று நாடுகள் பயணத்தின் நிறைவாக, குரேஷியாவுக்கு புறப்பட்டுச் சென்றார்.

2. நாட்டின் வளர்ச்சியில் வடகிழக்கு மாநிலங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

3. நாட்டில் இதுவரை 77 கோடி பேருக்கு ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டிருப்பதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.

4. பேரிடர் பாதிப்புகளை எதிர்கொள்ள தயார் நிலையில் இருப்பதோடு, அதற்கான விழிப்புணர்வும் அவசியம் என்று பிரதமரின் முதன்மைச் செயலர் திரு. பி.கே. மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

5. மாஸ்டர்ஸ் கோப்பை ஹாக்கி போட்டியின் தொடக்க ஆட்டத்தில் இன்று பஞ்சாப் அணி – புதுச்சேரி அணியையும், தமிழகம் - கேரள அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமது மூன்று நாடுகள் பயணத்தின் நிறைவாக, குரேஷியாவுக்கு புறப்பட்டுச் சென்றார்.

சைப்ரஸ், கனடா நாடுகளில் பயணம் மேற்கொண்ட பிரதமர், ஜி.7 உச்சிமாநாட்டில் பங்கேற்றதுடன், பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதனைத் தொடர்ந்து, கனடாவில் தமது பயணத்தை முடித்துக் கொண்டு, இன்றுகாலை பிரதமர் குரேஷியா புறப்பட்டுச் சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

நாட்டின் வளர்ச்சியில் வடகிழக்கு மாநிலங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

நாகாலாந்தில் பழங்குடியின கிராம வளர்ச்சித் திட்டத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர், நாட்டின் முன்னேற்றத்தில் நாகாலாந்து மக்களின் பங்களிப்பிற்கு பாராட்டு தெரிவித்தார்.

மேகாலயா மாநிலத்தின் முக்கிய நகரங்களை நாட்டின் பிற பகுதிகளுடன் இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிராமப் பகுதிகளின் முன்னேற்றத்தில் பெண்கள் முதுகெலும்பாக திகழ்கின்றனர் என்று கூறிய திரு. ஜிதேந்திர சிங், மகளிர் சுயஉதவி குழுக்களை அதிக அளவில் தொடங்கி பயனடையுமாறும் கேட்டுக் கொண்டார்.

<<<<<<>>>>>>

ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தின் மூலம், டிஜிட்டல் சுகாதார சூழலியலை நோக்கி நாடு முன்னேறிச் செல்வதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.

ஆகாஷ்வாணி செய்திப் பிரிவுக்கு அவர் அளித்த பிரத்யேக பேட்டியில், இதுவரை 77 கோடி பேருக்கு ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பேரிடர் பாதிப்புகளை எதிர்கொள்ள தயார் நிலையில் இருப்பதோடு, அதற்கான விழிப்புணர்வும் அவசியம் என்று பிரதமரின் முதன்மைச் செயலர் திரு. பி.கே. மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த நிவாரணப் பணி ஆணையர்கள் மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினரின் இரண்டு நாள் மாநாட்டில் நிறைவுரையாற்றிய அவர், பேரிடர் மேலாண்மையில் மத்திய – மாநில அரசுகளின் கூட்டு முயற்சியை வலுப்படுத்த இந்த மாநாடு உதவிகரமாக அமைந்தது என்றார்.

பேரிடர் பாதிப்புகளை எதிர்கொள்வதில் மாநில அரசுகள் தங்களது ஆயத்த நிலையை மேலும் அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

நகர்ப்புறங்களில் ஏற்படும் வெள்ள பாதிப்புகளை தடுக்க, அந்தந்த பகுதிகளின் பருவநிலை மற்றும் நில அமைப்பிற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம் என்றும் திரு. பி.கே. மிஸ்ரா வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

அஹமதாபாத் விமான விபத்தை தொடர்ந்து, ஏர் இண்டியா மற்றும் ஏர் இண்டியா எக்ஸ்பிரஸ் விமானங்களின் இயக்கம் குறித்து அந்த நிறுவனத்தின் உயரதிகாரிகளுடன், சிவில் விமான போக்குவரத்துத்துறை தலைமை இயக்குநர் ஆலோசனை நடத்தியுள்ளார்.

அப்போது ஏர் இண்டியா நிறுவனம், விமான பராமரிப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்திய அவர், விமானங்களின் தரையிறக்கம் உள்ளிட்ட பணிகளில் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டார்.

பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதுடன், விதிமுறைகளை முழுமையாக பின்பற்றுமாறு தலைமை இயக்குநர் வலியுறுத்தியதாக விமான போக்குவரத்துதுறை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

இனி,

மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள் . . .

(சவுணட் பைட் - ஓப்பனிங் 10 செகண்ட்ஸ்)

சேவை, நல்லாட்சி, ஏழைகளின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு, கடந்த 11 ஆண்டுகளாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதன் காரணமாக நாடு பெரிய அளவிலான மாற்றங்களை கண்டுள்ளது.

இதுதொடர்பான செய்தித் தொகுப்பில் இன்று பொருளாதார மாற்றத்தில் மகளிரின் பங்களிப்பு குறித்த தகவல்கள் இடம்பெறுகின்றன.

(வாய்ஸ் பைட் 77 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

நாட்டிலேயே முதன்முறையாக ஆன்ட்ராய்டு செல்ஃபோன்களை பயன்படுத்தி, இருப்பிடத்திலிருந்தே மின்னணு முறையில் வாக்களிக்கும் நடைமுறையை செயல்படுத்த பீகார் மாநில தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

அம்மாநிலத்தில் இம்மாதம் 28ஆம் தேதி நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் இந்த புதிய முயற்சி செயல்படுத்தப்படவிருப்பதாக அம்மாநில தேர்தல் ஆணையர் திரு. தீபக் பிரசாத் தெரிவித்துள்ளார்.

இதுவரை, 10 ஆயிரம் வாக்காளர்கள் இந்த புதிய முறையில் வாக்களிக்க பதிவு செய்துள்ளதாகவும், 50 ஆயிரம் வாக்காளர்கள் வரை மின்னணு வாக்களிப்பு முறையை பயன்படுத்த வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் வேளாண் - உணவுச் சூழல் அமைப்பை மேம்படுத்த சென்னை ஐஐடி, மாநில அரசுடன் கூட்டு முயற்சியை மேற்கொண்டுள்ளது.

இதன்மூலம் தமிழகத்தில் நிலையான கிராமப்புற மேம்பாடு, வேளாண் வணிக கண்டுபிடிப்பு மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

உணவு பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்துடன் ஐஐடி சென்னை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றிலும் கையெழுத்திட்டுள்ளது.

இந்த ஒத்துழைப்பு மூலம், சென்னை ஐஐடி-யிடமிருந்து கிடைக்கப் பெறும் நிபுணத்துவம் , விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கவும், அறுவடைக்கு பிந்தைய இழப்புகளை குறைக்கவும் உதவிகரமாக இருக்கும் என்று தமிழக அரசின் சிறு குறு நடுத்தர தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அதுல் ஆனந்த் தெரிவித்தள்ளார்.

இந்த முன்முயற்சியின் கீழ், கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் வணிகத்தில் திறன் பயிற்சி அளித்தல், விநியோக சங்கிலிகளை மேம்படுத்துவது, உணவுப் பொருட்கள் வீணாவதை குறைத்து ஏற்றுமதி திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சென்னை ஐஐடி இயக்குநர் திரு. காமகோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

மேற்கு ஆப்பிரிக்க நாடான மாலி-யில் ராணுவ ஆட்சியாளரான ஜெனரல் **Assimi Goita**-வின் பதவிக்காலத்தை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடிக்க அந்நாட்டு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கடந்த 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட புரட்சியின் மூலம், ராணுவத் தளபதி **Goita** ஆட்சியை கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>>

மேகாலயா, மேற்குவங்கம், ஜார்க்கண்ட் மற்றும் ஒடிசா மாநிலங்களின் ஒருசில இடங்களில் இன்று அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடலோர கர்நாடகா, கோவா, மஹாராஷ்ட்ரா, குஜராத் மற்றும் கொங்கன் பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் தில்லியில் நேற்று பெய்த மழையால் கோடை வெயிலின் தாக்கம் குறைந்ததால், மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இதனிடையே, தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் அவலாஞ்சி, அப்பர் பவானி, பார்சன்ஸ்வேலி பகுதிகளில் பெய்த மழை காரணமாக, எமரால்டு மற்றும் காமராஜ்சாகர் அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

திருப்பூர் மாவட்டம், உடுமலை சுற்றுவட்டார பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக, அமராவதி அணை, அதன் முழுக் கொள்ளளவை எட்டும் நிலையில் உள்ளதால், அணையிலிருந்து 2 ஆயிரம் கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

இதனால், கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக, கோவை மாவட்டம், வால்பாறை அருகே அமைந்துள்ள சோலையார் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 8 அடி உயர்ந்துள்ளது.

இதனிடையே ஒகேனக்கல் காவிரியாற்றில் இன்று காலை நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 6 ஆயிரம்து 500 கனஅடியாக அதிகரித்துள்ளது.

<<<<<<>>>>>>

மாஸ்டர்ஸ் கோப்பை ஹாக்கி போட்டிகள் சென்னையில் இன்று தொடங்குகிறது.

பத்து நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் ஆடவர் பிரிவில் 12 அணிகளும், மகளிர் பிரிவில் 8 அணிகளும் பங்கேற்கின்றன.

இந்திய ஹாக்கி விளையாட்டின் பாரம்பரியத்தை கௌரவிக்கும் விதமாக நடத்தப்படும் இப்போட்டியின் ஆடவர் பிரிவு ஆட்டங்களில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களும், மகளிர் பிரிவில் 35 வயதுக்கு மேற்பட்டவர்களும் விளையாடவுள்ளனர்.

இன்று நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் பஞ்சாப் அணி – புதுச்சேரி அணியையும், தமிழகம் - கேரள அணியையும் எதிர்கொள்கின்றன.

மகளிர் பிரிவின் முதல் ஆட்டத்தில் மஹாராஷ்ட்ர அணி – ஹிமாச்சலப்பிரதேச அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<>>>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் திருச்சி அணி – கோவை அணியை 14 ரன் வித்தியாசத்தில் வென்றது.

இன்றைய ஆட்டத்தில் நெல்லை அணி – மதுரை அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<END>>>>>>>